**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| CaseNo | : | CC.440/2014<br>STC.<br>M.C. |
| Deposition of witness | : | PW.5 |
| Name | : | சங்கீதா |
| Father's/Husband Name | : | சுவாமிநாதன் |
| Village | : | பேராவூரணி |
| Taluk | : | பேராவூரணி |
| Caste | : | |
| Calling | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of February 2020

**முதல் விசாரணை.**

நான் பேராவூரணி கழனிவாசல் கிராமத்தில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தணம். எதிரிகளை தெரியும். எங்களுக்கு சொந்தமான இடத்தில் 1வது எதிரியான ஊராட்சி மன்ற தலைவர் முருகன் பாதை அமைத்தது சம்பந்தமாக நாங்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து எங்களுக்கு ஆதரவாக தடை உத்தரவு கிடைக்கப்பட்டது. இது சம்பந்தமாக எங்களுக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்து வந்தது. 31.05.2008 அன்று இரவு 11.00 மணியளவில் நான், எனது மாமனார் ராமநாதன், மாமியார் முத்தம்மாள் ஆகியோர் வீட்டில் இருந்தோம். என் கணவர் தஞ்சைக்கு சென்றிருந்தார். அப்போது வீட்டின் முன்பு நிறைய பைக் வரும் சத்தம் கேட்டது. அப்போது நானும் எனது மாமியாரும் வெளியே வந்து பார்த்த போது 3 பைக் வந்தது. மேற்படி பைக்குகளில் முருகன், 1வது எதிரியின் தம்பி ராதாகிருஷ்ணன், 1வது எதிரியின் தகப்பனார் ஆறுமுகத்தேவர், 1வது எதிரியின் மைத்துணர் ஆறுமுகம், திருஞானம், சோமசுந்தரம், காமராஜ், முருகேசன் மற்றும் ஜெயக்குமார் ஆகிய எதிகிள் அனைவரும் அறுவாள், இரும்பு கம்பி, பாறை மற்றும் பெட்ரோல் கேன் உடன் வந்தனர். 1வது எதிரி முருகன் எனது மாமனாரை அவரது இடது கண்ணில் அறுவாளால் வெட்டினார். 1வது எதிரியின் ராதாகிருஷ்ணன் மற்றும் மற்ற எதிரிகள் என் மாமனாரை இரும்பு கம்பியால் அடித்து விட்டு

அவருடைய பூநூலை அறுத்துவிட்டனர். 1வது எதிரி முருகன் என் மாமானார் மூக்கில் குத்தியபோது அவருக்கு மூக்கு உடைந்து ரத்தம் வந்தது. 1வது எதிரியின் தகப்பனார் எதிரி ஆறுமுகத்தேவர் என் மாமனாரை பெட்ரோல் ஊற்றி கொளுத்த முயற்சித்தார் அப்போது என் மாமனார் கத்தினார். நாங்கள் வெளியே நின்றோம் அப்போது எதிரிகள் எப்படிடா எங்களுக்கு எதிராக ஸ்டே வாங்கலாம் என்று சொல்லி அசிங்கமாக திட்டி எங்கடா உங்க மகன் என்று கேட்டார்கள். நான் வெளியே நின்ற போது என்னை பார்த்து அசிங்மாக பேசி இவளை விடாதீர்கள் என்று சொன்னார்கள். எதிரிகள் உள்ளே நுழைய முயற்சி செய்தார்கள் நாங்கள் சத்தம் போடவும் அக்கம் பக்கத்தினர் வந்துவிட்டார்கள். நாங்கள் வீடு கட்டுவதற்காக வீட்டின் வெளியே வைத்திருந்த கல், கம்பியால் என் மாமனாரை அடித்தார்கள் அக்கம் பக்கத்தினர் வரவும் எதிரிகள் ஓடிவிட்டார்கள். நாங்கள் என˙ மாமனாரை வீட்டிற்குள் அழைத்து வந்தோம். என் கணவர் வந்தவுடன் என் மாமனாரை அழைத்து கொண்டு பேராவூரணி காவல்நிலையம் சென்று என் கணவர் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தாகள்.

**குறுக்கு விசாரணை**

பாதை சம்பந்தப்பட்ட பிரச்சனைக்குரிய இடத்திற்குரிய ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது என் கணவருக்கு தான் தெரியும், இடம் எங்களுக்கு சொந்தமானது என்பதால் தான் உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றோம். பாதை சம்பந்தப்பட்ட இடம் அரசு ஆவணங்களில் அரசு இடமாக உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சாலை அமைக்க வேண்டும் என்றால் அது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், தாசில்தார், பிடிஓ ஆகியோர் தான் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. சாலை போடுவது சம்பந்தமாக பேராவூரணி தாசில்தார் அவர்கள் வழங்கிய உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்று தஞ்சை மாவட்ட ஆட்சியர், பட்டுக்கோட்டை கோட்டாட்சியர் மற்றும் பேராவூரணி தாசில்தார் ஆகியோர்கள் மீது தான் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான் பின்னிட்டு பஞ்சாயத்து தலைவரை சேர்த்தோம் என்றால் சேர்த்ததாக தெரியும். நான் ஸ்டே வாங்கவில்லை என்றால் சரியல்ல ஸ்டே பெற்றுள்ளோம் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்று என் கணவரை கேட்க வேண்டும். தாசில்தாருக்கு எதிராக கொடுத்த ரிட் மனுவை நாங்களே திரும்பி வாபஸ் பெற்றுக்கொண்டோம் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ரிட்மனுவில் பாதை சம்பந்தப்பட்ட அரசுக்கு சொந்தம் என்றும் எங்களுக்கு பி மெமோ கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம் என்றால் அதை குறித்து என் கணவரை தான் கேட்க வேண்டும். அரசு இடத்தில் ரோடு போடுவதற்கு பிறப்பிக்கபபட்ட உத்தரவு எங்களுக்கு பாதகமாக அமைந்ததால் அதில் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரமணமாக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டு அதற்கு ஏற்றாற் போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் குடியிருக்கும் இடம் தெரு, வரிசையாக வீடுகள் உள்ளது என்றால் கூப்பிடும் தூரத்தில் வீடுகள் உள்ளது. எனக்கு இரண்டு பையன் என்றால் சரிதான். நான் எனது மகன்கள் எல்லாரும் தனியாக ஒரு அறையில் படுத்திருந்தோம் என்றால் சரிதான். எனது மாமனார் வீட்டிற்கு வெளியேயும், மாமியார் வீட்டிற்குள்ளேயும இருந்தார். என் வீட்டின் கதவு தாழிடப்பபடடிருந்தது. பைக் சத்தம் கேட்கவும் நான் கதவை திறந்து வெளியே வந்தேன்.

என் மாமனார் திண்ணையில் படுத்திருந்தார் அவர் படுத்திருக்கும் போது பாய் போட்டிருந்தாரா, பெட்சீட் போட்டிருந்தாரா அல்லது மெத்தை போட்டிருந்தாரா என்பது குறித்து எனக்கு நினைவு இல்லை. என் மாமனரை வெட்டும் போது ரத்தங்கள் வழிந்ததா என்றால் ரத்தங்கள் பட்டது அவரது வேஷ்டி மற்றும் பனியனில் பட்டிருந்தது. என் மாமனாரை மருத்துவமனைக்கு அழைத்துசெல்ல முயற்சி மேற்கொண்டேனா என்றால் நான் செவிலியர் என்பதால் நானே வீட்டில் முதலுதவி மேற்கொண்டேன். அக்கம் பக்கத்தினர் வந்து பிரச்சனையை தடுத்தார்களா என்றால் இல்லை வேடிக்கை தான் பார்த்தார்கள். 31.05.2008 அன்று இரவு 11.30 மணிக்கு எதிரிகள் என் வீட்டிற்கு 3 பைக்கல் வந்ததாகவும் என் மாமனாரை தாக்கியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. என் மாமனாரை மூக்கில் குத்தினார் என்பதும், பூநூலை அறுத்தார்கள் என்பதும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. எதிரி ஆறுமுகத்தேவர் பெட்ரோல் கேனை எடுத்து கொளுத்த முயற்சித்தார் என்பதும், எப்படிடா உங்கள் மகன் ஸ்டே வாங்கினார் என்றும் திட்டினார் என்பதும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. என்னை சாதியை சொல்லி கற்பழிங்கடா என்று கூறியதாகவும் இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் 1வதுஎதிரி எங்கள் ஊர் தலைவராக இருந்ததால் அரசு பிறப்பித்த உத்தரவு செயல்படுத்திவிடுவார் என்ற காரணத்திற்காக எதிரிகள் மீது பொய்யாக ஒரு வழக்கு கொடுத்தோம் என்றால் சரியல்ல. அதற்கு ஏற்றாற் போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/-எஸ்.முத்துமுருகன்,
நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| CaseNo | : | CC.440/2014<br>STC.<br>M.C. |
| Deposition of witness | : | PW.6 |
| Name | : | மூர்த்தி |
| Father's/Husband Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | வீரையன்கோட்டை |
| Taluk | : | பேராவூரணி |
| Caste | : | |
| Calling | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of February 2020

**முதல் விசாரணை.**

நான் வீரையன் கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். 02..06.2008 அன்று காலை 08.00 மணியளவில் ராமநாதன் வீட்டிற்கு, இரண்டு நாட்களுக்கு முன்னாடி சண்டை என்று சொன்னதால் அவரை பார்க்க சென்றேன். அப்போது அங்கு போலிசார் வந்து விசாரித்து பக்கத்தில் உள்ள வீடுகளையெல்லாம் படம் வரைந்து கொண்டிருந்தார்கள் அதில் என்னையும், கண்ணன் என்பவரையும் சாட்சியாக கையெழுத்து போட சொன்னாாகள். பார்வைமகசரில் எங்களுடைய முகவரி, போலிஸ் ஸ்டேசன் 5 கிமீ தூரத்தில் இருப்பதாக எழுதியிருந்தாகள், விசாரிக்க வந்த நேரம், சட்ட பிரிவுகள் அனைத்தும் எழுதியிருந்தார்கள் அதை நான் படித்து பார்த்து விட்டு முதல் கையெழுத்து நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது அந்த பார்வைமகசர் **அசாஆ2** ஆகும். என்னிடம் காட்டப்படும் வரைடம் சம்பவ இடத்தில் வரைந்தது தான் அந்த மாதிரிவரைபடம் **அசாஆ3** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

போலிசார் ஊருக்கு வந்து விசாரித்ததற்கு சாடசியாக இருக்க வேண்டி எனதுமுகவரி எழுதி கொண்டு கையெழுத்து கேட்டாாகள் நானும் கையெழுத்து போட்டேன் என்றால்சரிதான். கழனிவாசலில் இருந்து எங்கள் ஊர் 07, 08 கிமீ தூரம் இருக்குமா என்றால் 04 கிமீ தூரம் இருக்கும். சாமிநாதன் எனக்கு வேண்டியவர் என்பதால் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்ததை நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/-எஸ்.முத்துமுருகன்,
நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| CaseNo | : | CC.440/2014<br>STC.<br>M.C. |
| Deposition of witness | : | PW.7 |
| Name | : | கண்ணன் |
| Father's/Husband Name | : | முத்துசாமி |
| Village | : | குருவிக்கரம்பை |
| Taluk | : | பேராவூரணி |
| Caste | : | |
| Calling | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of February 2020

**முதல் விசாரணை.**

நான் குருவிக்கரம்பை கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். 31.05.2008 அன்று சாமிநாதன் வீட்டில் கழனிவாசலை சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர் முருகன் டீம் அடித்துவிட்டதாக சொல்லி 02.06.2008 அன்று சாமிநாதனை பார்க்க காலை 08.00 மணிக்கு சாமிநாதன் வீட்டிற்கு சென்றோம். அப்போது போலிஸார் அளவு எடுத்து கொண்டு படம் வரைந்தார்கள் எழுதி கொண்டிருந்தார்கள். அவர்கள் எழுதிய பேப்பரில் அந்த வீட்டிற்கும காவல்நிலையதத்திற்கும் உள்ள தூரம், எனது முகவரி மற்றும் மூர்த்தி என்பவரது மூகவரி இருந்தது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது அந்த கையெழுத்து **அசாஆ4** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கழனிவாசல் கிராமத்திற்கும் எங்கள்ஊருக்கும் எவ்வளவு தொலைவு என்றால் 04 கிமீ தூரம் இருக்கும். நான் சாமிநாதன் வீட்டிற்கு போன போது அங்கே இருந்த போலிசார் முகவரியை கேட்டு எழுதி கொண்டு கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

சாமிநாதன் எனக்கு வேண்டியவர் என்பதால் முதல் விசாரணையில் அளித்த விபரத்தை பற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/-எஸ்.முத்துமுருகன்,
நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.